03.02.2023

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

**SC No. 205/2018**

அ.சா.**4**

**பெயர்.திரு**.லோகேஷ்குமார்

சாட்சி இன்று 03.02.2023 மீண்டும் அழைத்து சத்தியபிராமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் கடந்த 2006ல் கடலூரில் பயிற்சி பள்ளியில் காவலராக பணியில் சேர்ந்தேன். தமிழநாடு காவல் துறை சார்நிலை பணி ஒழுங்கு மற்றும் மேல்நடவடிக்கை விதிகள் 1995 தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. காவல்துறை பணியில் நேர்மையாகவும், கண்ணியமாகவும் செயல்படவேண்டும் என்று சொன்னால் சரிதான். நான் நேர்மை தவறுதல், கன்னியமற்ற முறையில் நடந்துக்கொள்ளுதல், கையூட்டு பெறுதல், குற்றவாளிகளுடன் கள்ளத்தொடர்பு வைத்தல் போன்ற செயல்களை செய்துள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு புகார் எதுவும் என் மீது நடந்ததா என்றால் துரை என்பவர் தாக்கப்பட்டதாக ஒரு துறை விசாரணை மட்டும் நடத்தப்பட்டது. எனக்கு காவல்நிலைய ஆணைகள் பற்றி தெரியுமா என்றால் தெரியும். கடலூரில் பணியாற்றி பிறகு நான் பழநி,சேலம், டெல்லி பணியாற்றி மீண்டும் கடலூர் வந்து தற்சமயம் விழுப்புரத்தில் காவலராக பணியாற்றி வருகிறேன். ரயில்வே காவல்நிலையத்தில் என்னென்ன பதிவேடுகள் பராமரிக்கப்படும் என்றால் சென்ட்ரி புக், ஜிடி புக், எப்ஐஆர் பதிவேடு, பிஎஸ்ஆர் பதிவேடு உள்ளீட்டவை பராமரிக்கப்படுகிறது. எங்கள் காவல்நிலைய பொறுப்பு அலுவலர் உண்டா என்றால் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளர் மற்றும் காவல் உதவி ஆய்வாளர் இருப்பார்கள். ஜிடி எழுதுவதற்கு தினமும், ஒரு காவலர் உதவி ஆய்வாளர் பணி அமர்த்தப்படுவார். அவர்தான் காவல்நிலைய பதிவேடுகளை

பராமரிப்பு செய்வார் என்றால் சரிதான். தினம் தினம் அவ்வாறு ஜிடி எழுதுவதற்கு ஆட்களை மாற்றுவர்கள் என்றால் சரிதான். ஜிடி எழுதும் அதிகாரி இல்லாத நிலையில் நிலைய எழுத்தர் ஜிடி எழுதுவார். எங்கள் காவல்நிலைய ஆய்வாளர் தலைமையில் உதவி ஆய்வாளர்கள், தலைமை காவலர்கள், காவலர்கள் என எத்தனை பேர் வேலை பார்த்தார்கள் என்றால் சுமார் 30பேர். தினமும் காலை 7மணிக்கும் இரவு 8.00மணிக்கும் ரோல்கால் நடக்கும் என்றால் அவ்வாறு தான் நடத்த வேண்டும் ஆனால், காவல் ஆய்வாளரை பொருத்து சில நேரங்களில் ரோல்கால்கள் நடத்துவார்கள், சிலசமயம் நடத்தாமலும் இருப்பார்கள். ஆய்வாளர் இல்லாத நிலையில் உதவி ஆய்வாளர் ரோல்கால் நடத்ததலாம், அவரும் இல்லை என்றால் ரோல்கால் நடத்தாமலும் இருப்பார்கள். ரோல்கால் நடத்திய பிறகு தான் யார் யாருக்கு என்னென்ன பணி என்று பணி ஒதுக்குவார்கள் என்றால் சரியல்ல. முந்திய நாள் இரவே என்னென்ன பணி என்று சொல்லிவிடுவார்கள். காவலர்கள் பாக்கெட் டைரி பராமரிக்க வேண்டும் என்றால் சரிதான். பாக்கெட் டைரியில் அன்றென்றிக்கு செய்த பணிகளை குறிக்க வேண்டும் என்றால் சரிதான். பணி முடிந்து செல்லும்போது நிலைய பொறுப்பு அலுவலரியிடம் பாக்கெட் டைரியை ஒப்படைப்பு செய்ய வேண்டும் என்றால் சரிதான். நான் எனது பாக்கெட் டைரியை ஒப்படைத்தேனா என்றால் நான் கிரைம் டியூட்டி பார்த்ததால் பாக்கெட் டைரியை எழுதவில்லை. டைரியை ஒப்படைக்கவில்லை. எங்களது காவல்நிலையத்தில் ரவி என்பவர் எஸ்பி ஏட்டாக பணியில் இருந்து வந்தார் என்றால் சரிதான். அவர் தினமும் நடக்கும் விசயங்களை மேல் அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டியது அவரது கடமை என்றால் சரிதான். எனக்கு என்ன பணியை ஒதுக்கினாலும் நிலைய பொறுப்பு அதிகாரியிடம் சொல்ல வேண்டும் என்றால், அப்படி கிடையாது காவல் ஆய்வாளர் அல்லது எனது உயர் அதிகாரிகள் போனில் தகவல் சொன்னாலும் அந்த பணியை நாங்கள் செய்வோம். ஜிடி எழுத்தரியிடம் சொல்லிவிட்டு தான்

எந்த பணிக்கும் செல்ல வேண்டும் என்றால் சரியல்ல. பணியில் எதாவது பிரச்சனை இருந்தால், நிலைய பொறுப்பு அதிகாரிக்கு தெரிவிக்க வேண்டும் என்றால் சரிதான். நான் 2013 முதல் கிரைம் டியூட்டி பணியில் இருக்கிறேன். பாண்டிச்சேரி வில்லியனுருக்கு ஒரு செயின் வழிப்பறி செய்த குற்றவாளியை பிடிக்க சென்று அவனை பிடித்து வந்தோம். நானே சென்று குற்றவாளியை பிடித்தேன் என்றால் சரியல்ல. திருச்சியில் இருந்து ஒரு போலீஸ் டீம் வந்தது அவர்களுடன் சென்று பிடித்து வந்தேன். அந்த கைதியை காவல்நிலையம் கொண்டு வந்து பிற்பாடு நீதிமன்ற காவலுக்கும் அனுப்பி வைத்தோம். அந்த கைதியை காவல்நிலையத்தில் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பியது பொது நாட்குறிப்பில் எழுதப்பட்டதா என்று எனக்கு தெரியாது. வழக்கமாக எழுதுவார்கள். 5.5.2014 அன்று இரவு எனக்கு கிரைம் டியூட்டி வழங்கப்பட்டது என்றால் சரிதான். எத்தனை மணி முதல் எத்தனை மணி வரை என்று சொன்னால் நேரம் நிர்ணயம் கிடையாது. இரவு 8.00 மணி முதல் மறுநாள் காலை 7.00மணி வரை எனது பணி என்று சொன்னால் சரியல்ல. 6.5.2014 தேதி காலை 6.00மணிக்கு நான் காவல்நிலையத்தில் இருந்து வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்று சொன்னால் ' சரிதான். எனகு சாட்சிகள் அய்யப்பன், ராபர்ட், சிவகுமார் ஆகியோர் பள்ளி நண்பர்கள், கிரிக்கெட் விளையாட்டு தோழர்கள் என்றால் சரிதான். நான் எனது நண்பர்களுடன் மது குடிப்பேன் என்றும், அவர்களுக்காக நான் செலவு செய்வேன் என்றால் சரியல்ல. அவ்வாறு செலவு செய்வதற்காக நான் முறைகேடாக எனது காவல் பணியை பயன்படுத்தி பணம் சேர்ப்பேன் என்றால் சரியல்ல. 5.5.2014 தேதி ஜிடி எழுதும் பொறுப்பு அலுவலர் யார் என்றால் அது எனக்கு நினைவில்லை. 6.5.2014 தேதி ஜிடி எழுதும் பொறுப்பில் சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜன் என்பவர் இருந்தார். நான் பணியில் இருந்த காலத்தில் குற்றச்சாட்டு குறிப்பாணை எதாவது கொடுத்தார்கள் என்றால் இல்லை. ' இவ்வழக்கு சம்மந்த தொடர்பாக தற்காலிக பணிநீக்கத்தில் இருந்தபோது குற்றச்சாட்டு

குறிப்பாணை கொடுத்தார்கள். நான் தற்காலிக பணிநீக்கத்தில் இருந்தபோது திருச்சி காவல் கண்காணிப்பாளர் ஆனிவித்யா ஐபிஎஸ் என்பவர் என் மீது துறை நடிவடிக்கை விசாரணை செய்ய எங்களது ஏடிஎஸ்பிக்கு அவர்களுக்கு உத்தரவிட்டார் என்றால் இவ்வழக்கு தொடர்பாக அந்த உத்தரவு பிறப்பிக்கவில்லை. ஆனால் துரை என்பவர் தாக்கப்பட்டது தொடர்பாக தான் அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. துரை என்பவரையோ, ரவி என்பவரையோ தொந்தரவு செய்யமட்டேன் என்றும், அச்சுறுத்த மாட்டேன் என்றும் அந்த விசாரணையில் நான் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த விசாரணைக்கு துரை என்பவரும் ஆஜராகி அவரையும் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அந்த விசாரணை நடவடிக்கைகள் இன்னும நிலுவையில் உள்ளது. 7.5.2014 அன்று என்னை தற்காலிக பணிநீக்கம் செய்தார்கள் என்றால் சரியல்ல. 8.5.2014ந் தேதி அந்த உத்தரவு எனக்கு காலை 10.00மணிக்கு சார்வு செய்யப்பட்டது. இந்த வழக்கு அ்சா.2 அசாரியா என்பவரை எனக்கு தெரியும் என்று சொன்னால் காவல்நிலையத்தில் பார்த்தபோது எனக்கு தெரியும், அவரை நான் 6.5.2014 அன்று நான் மாலை 5.00மணிக்கு அவரை பார்த்தேன். 6.5.2014 தேதி இரவு 10.00மணிக்கு நான் பணிக்கு வரவேண்டும் ஆனால் காவல்நிலையத்தில் குற்றவாளி இருப்பதால் வரவேண்டும் என்று அழைத்ததால் நான் மாலை 5.00மணிக்கு காவல்நிலையம் வந்துவிட்டேன். நான் சொல்வதுபோல மாலை 5.00மணிக்கு காவல்நிலையம் வரவில்லை என்றும் இரவு 8.00மணிக்கு பணி என்றும் சொன்னால் சரியல்ல. 6.5.2014 தேதி காலையில் எனக்கு போன் செய்தார்கள் என்றும், நான் போனை எடுக்காமலும் தவிர்த்து வந்தேன் என்றும் நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. காவலராகிய நான் காவல்நிலையத்தில் இருந்து போன் வரும்போது அவசர வேலையாக இருக்காலம் என்று கருதி போனை எடுத்திருக்க வேண்டும் என்றும் அவ்வாறு போனை எடுக்காமல் தவிர்த்தது ஏன் என்றால் மேல் அதிகாரிகளான காவல் ஆய்வாளரோ உதவி

ஆய்வாளரோ போன் செய்து இருந்தால் நான் போனை எடுத்திருப்பேன். காவலர்களான 1வது எதிரீ திருக்குமரனும், 2வது எதிரி பாலமுருகனும் போன் செய்ததால் நான் போனை எடுக்கவில்லை. சாட்சி ரவி என்பவரை தெரியமா என்றால் தெரியும். அவர் ரயில்வே பிளாட்பாரத்தில் டீ விற்பார். மேற்படி சாட்சி ரவியும், இறந்துபோன ஜெயவேலும் நண்பர்கள் என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு தொடர்பாக ரயில்வே டிஎஸ்பி ரவியை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. துரை தாக்கப்பட்டது தொடர்பாக தான் ரவியை விசாரித்தார்கள். ரவி போலீஸ் விசாரணையில் ஜெயவேல் தனது நண்பர் என்றும், அவருக்கு குடிப்பழக்கமும், பெண்கள் சகவாசமும் உண்டு சொல்லியுள்ளார் என்றால் அப்படி சொல்லவில்லை. ஜெயவேலுக்கு திருட்டு பழக்கமும் உண்டு என்றால் இதுவரை அவ்வாறு எந்த வழக்கும் கிடையாது. ரயில்வே பிளாட்பாரத்தில் உரிமம் இல்லாமல் யாரும் வியாபாரம் செய்யக்கூடாது என்றால் சரிதான். ஜெயவேல் உரிமம் வைத்திருந்தாரா என்று எனக்கு தெரியாது. ஜெயவேலுக்கு உரிமம் இல்லை என்றும், அதனை சுட்டிக்காட்டி ஜெயவேலுவிடம் நான் அவ்வப்போது மிரட்டி பணம் வாங்குவேன் என்றால் சரியல்ல. ரயில்வே டெக்னிஷியன் பாஸ்கரன் என்பவரை எனக்கு தெரியாது. டெக்னிஷியன் பாஸ்கரன் என்பவரும் ஜெயவேலும் நெருக்கமான நண்பர்கள் என்றால் அது எனக்கு தெரியாது. ரயில்காலணியில் பாஸ்கரன் தனியாக குடியிருந்தார் என்றால் அப்படி யாரும் குடியிருக்கவில்லை. பாஸ்கரன் வீட்டில் ஜெயவேல் அடிக்கடி போய் தங்குவார் என்றும், பாஸ்கரனுக்கு வேண்டிய வசதிகளை செய்வார் என்றால் சரியல்ல. ஜெயவேலுக்கும் பாஸ்கரனுக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் பழக்கம்இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. நான் ஜெயவேலுவை எந்த காலத்திலும் மிரட்டியதோ, துன்புறுத்தியதோ கிடையாது. ஜெயவேல் திருடும் பொருட்களை பாஸ்கரனிடம் கொடுப்பார் என்றும் இதை தெரிந்து நான் ஜெயவேலுவை மிரட்டுவேன் என்றால் சரியல்ல. நான் ஜெயவேலுகை

மிரட்டுவதாக பாஸ்கரன் ரயில்வே உயர் அதிகாரிகளுக்கு மனு அனுப்பினார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அப்படி மனு இருப்பதாக யாரும் என்னிடம் சொல்லவில்லை. அவ்வாறு மனு இருப்பதாக போலீசாரோ அல்லது சிபிசிஐடி போலீசாரோ என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. இவ்வழக்கு பிரச்சனைக்கு பிறகு நான் எனது நண்பர்களாகிய சாட்சி சிவகுமார், அய்யப்பன், ராபர்ட் ஆகியோரிடம் நான் ஒரு பிரச்சனையில் மாட்டிக்கொண்டேன் என்றும் என்னை நீங்க்ள் காப்பாற்ற வேண்டும் என்றும் , ரயில்வே போலீசை பாருங்கள் என்று நான் சொன்னேன் என்றால் ரயில்வே போலீசை பாருங்கள் என்று சொன்னது உண்மை ஆனால் நான் பிரச்சனையில் மாட்டிக்கொண்டேன் என்றும் என்னை காப்பாற்ற வேண்டும் என்று நான் சொல்லவில்லை. நான் ரயில்வே போலீஸ் விசாரணையிலும் நீதித்துறை நடுவர் விசாரணையிலும் அதை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் சிபிசிஐடி விசாரணையில் நான் உண்மையை சொல்லியுள்ளேன். நான் ரயில்வே போலீஸ் விசாரணையிலும், நீதித்துறை நடுவர் விசாரணையிலும் பொய் சொல்லியதாக சொல்கிறேன் என்றால் சரிதான். நான் 6.5.2014 தேதி மாலை 5.00மணிக்கு தான் காவல்நிலையம் சென்றேன். அதனால் அசாரியா புகார் கொடுத்ததும் குறித்தும் ஜெயவேலை எப்படி பிடித்தார்கள் என்று எனக்கு நேரிடையாக தெரியாது. அசாரியாவையும், ஜெயவேலையும் அழைத்து காவல்நிலையம் வந்த பிறகு தான் வழக்கு பதிவு செய்யப்படடுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 6.5.2014ந் தேதியே அசாரியா புறப்பட்டு சென்றுவிட்டார். 7.5.2014தேதி வழக்கு பதிவு செய்துள்ளார்கள். 7.5.2014 தேதி தான் தன்னிடம் இருந்து பர்ஸ் திருடப்பட்டதாக அசாரியா புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் அது பொய். 7.5.2014 தேதி தான் எதிரி ஜெயவேலை பிடித்தார்கள் என்றும், நானும் பிடிக்க போனேன் என்றும், ஜெயவேல் தப்பிக்கும் முயற்சியில் தண்டவாளத்தில் தடுமாறி விழுந்து அடிப்பட்டார் என்றும், பொதுமக்களும் பிடித்து அடித்தார்கள் என்றும், அதனால் தான்

ஜெயவேலுக்கு காயம் ஏற்பட்டது என்றும் நான் ரயில்வே போலீஸ் விசாரணையிலும், நீதித்துறை நடுவர் விசாரணையில் சொன்னேன் என்றால் காவல் ஆய்வாளராக வாசுதேவன் சொன்னதின்பேரில் அவ்வாறு சொன்னேன். அந்த விபரங்கள் பொய். நான் தான் ஜெயவேலுவை எனது நண்பர்களுடன் சேர்த்து அடித்து துன்புறுத்தி காவல்நிலையத்தில் ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல. எனக்கு வேலை தருவதாக வாக்குறுதி அளித்து வேலை கொடுத்ததால் தற்சமயம் எனது உயர் அதிகாரிகள் அறிவுறுத்தலின் பேரில் உண்மைக்கு புறம்பாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆவணங்கள் திருத்தப்பட்டது என்றும், பாரா புக் திருத்தப்பட்டதும் என்றும், உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலின்படி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 6.5.2014 தேதி மாலை 5.00மணிக்கு நான் பணிக்கு வந்தது இரவு பணி செய்ததும் ஜிடியில் பதிவு செய்துள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது. நான் 6.5.2014 தேதி இரவு காவல்நிலையத்தில் இருந்து காவல்நிலைய பணி எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அவ்வாறு பணியில் இருந்தால் ஜிடியில் எழுதிருப்பார்கள் என்றும், நான் பணிக்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கு எதிராக நான் சொன்ன சாட்சியம் பொய் என்றும் ஜெயவேல் இறப்பதற்கு நான் தான் காரணம் என்றும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.